**தமிழ்நாடு அரசு**
**சுருக்கம்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் - வேலை வாய்ப்பு நோக்கில் அமைந்த பயிற்சித் திட்டங்கள் - 2000-2001 பிளாஸ்டிக் பதனம் செய்யும் இயந்திரம் இயக்ககப் பயிற்சி (றிறீணீவமீவீநீ றிக்ஷீஷீநீமீஉஉவீஸீரீ விணீநீலீவீஸீமீ ளிஜீமீக்ஷீணீமீஷீக்ஷீ சிஷீ௵கூஷீஉமீ) நீட்டிப்பு வேண்டி முன்மொழிவுகள்- ஆணை வெளயிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை**

அரசாணை(டி)எண்.38 நாள் 10.7.2000

படிக்க:

அரசாணை(டி)எண்.27, பி.மி.பி.(ம)சிந2 நலத்துறை, நாள் 16.6.99.
அரசாணை(நிலை) எண். 14, பி.மி.பி.(ம)சிந2 நலத்துறை, நாள் 16.3.99.
பி.(ம)சி. நல இயக்குநரின் கடித எண்.சி3/4434/2000, நாள் 15.5.2000.

ஆணை:

பார்வை ஒன்றில் கண்ட அரசாணையில் "பிளாஸ்டிக் பொருட்கள் பதனம் செய்யும் இயந்திரம் இயக்கப் பயிற்சியை" (6 மாத காலம்) 1999-2000-ஆம் ஆண்டில் சென்னை கிண்டி "சிப்பெட்" நிலையம் மூலமாக 25 பிற்படுத்தப்பட்டோர்., மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பெண்களுக்கு மட்டும் அளித்திட அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

2.. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர் பார்வை மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில், மேற்படி அரசாணைக்கிணங்க 1999-2000-ஆம் ஆண்டில் 24 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் (15 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் , 9 மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர்) பெண்களுக்கு " பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்கும் இயந்திரம் இயக்கப் பயிற்சி வெற்றிகரமாக அளிக்கப்பட்டதாகவும் , இந்தப் பயிற்சி பெற்றுள்ளவர்களில், ஆண்கள், மிக அதிக அளவில் "ஆபரேட்டர்" பணிகக்காக தொழிற்சாலைகளில் கேட்பு (ஞிமீனீணீஸீபீ) இருப்பதால், இப்பயிற்சி திட்டத்தில் நடப்பு ஆண்டு 2000-2001 முதல் பெண்கள் மற்றும் ஆண்கள் சமவீதத்தில் (50 :50) சேர்த்துக் கொண்டு செய்லபடுத்தலாம் என அரசுக்கு பரிந்துரை செய்து அதன் பேரில் அரசின் ஆணையினையும் கோரியுள்ளார்.

3. மேற்படி கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்தபின், அதனை ஏற்று, "பிளாஸ்டிக் பதனம் செய்யும் இயந்திரம் இயக்கப் பயிற்சி திட்டத்தினை" 25 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் பெண்கள் மற்றும் ஆண்களுக்கு சம 50:50 என்ற விகிதத்தில் 6 மாத காலத்திற்கான பயிற்சியினை 2000-2001-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்திட அரசு ஆணையிடுகிறது. இப்பயிற்சிக்கான கல்வி தகுதி பிளஸ் 2 படிப்பில் தேர்ச்சியும், வயது வரம்பு 17 முதல் 30 வரை இருக்க வேண்டும். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.25,000/- க்கு மிகாமல் இருக்க வேண்டும். பயிற்சியாளர் ஒருவருக்கு ரூ.21,000/- பயிற்சி கட்டணமாகவும், (அரசு மானியம் ரூ.16,000/- + பயிற்சியாளரின் பங்கு ரூ.5000/- ) உண்டி, உறையுள் கட்டணமாக பயிற்சியாளர் ஒருவருக்கு மாதம் ரூ.300/- வீதம் 6 மாதங்களுக்கு வழங்கப்படும்.

மேற்படி பயிற்சிக்காக ஆகும் மொத்தச் செலவினம் ரூ.5.20 இலட்சத்திற்கு இவ்வரசாணையின் இணைப்பில் கண்டுள்ளவாறு ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

4. பார்வை இரண்டில் கண்ட அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி உண்டி, உறையுள் கட்டணம் வெளியூர் மாணவர்களுக்கு மட்டும் வழங்கப்பட வேண்டும் என அரசு கட்டளையிடுகிறது.

5. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்ட செலவுத் தொகை கீழ்க்காணும் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படும்.

2225 - ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் - 03. பிற்படுத்தப்பட்டோர் நலன் - 277.கல்வி - ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் திட்டங்கள் - மிமி திட்டம் - ரிமி.பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வேலை வாய்ப்பு நோக்கில் அமைந்த பயிற்சித் திட்டங்கள் - 72.பயிற்சிகள். (த.தொ.கு. 2225 03 277 ரிமி 7200)

6. இந்த அரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண்.103/து.செ.(நி.கு) /2000, நாள் 16.6.2000 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ந..முருகன்,
அரசு செயலர்.

பெறுநர்

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல இயக்குநர், சென்னை-5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர், சென்னை-5.
மாநில கணக்காயர், சென்னை-18(பெயரில்).
மாநில கணக்காயர்(தணிக்கை.1), சென்னை-35.
மாநில கணக்காயர்(தணிக்கை-2), சென்னை-6.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-5.

நகல் :

சென்டிரல் இன்ஸ்டிட்யூட் ஆப் பிளாஸ்டிக் என்ஜீனியரிங் மற்றும் டெக்னாலஜி, கிண்டி, சென்னை-32.
நிதித்துறை, சென்னை-9.
நிதி(வரவு செலவு) துறை, சென்னை-9.
மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினா நல அலுவலர், சென்னை.

இருப்புக்கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது//

**இணைப்பு**

2000-2001-ஆம் ஆண்டு செலவினம் விவரங்கள்

திட்டம் : வேலை வாய்ப்பு நோக்கில் அமைந்த பயிற்சித் திட்டத்தின் கீழ் ''பிளாஸ்டிக் பதனம் செய்யும் இயந்திரம் இயக்கப் பயிற்சி'' (6 மாத கால பயிற்சி).

| வ .எண். பயிற்சிக் கட்டணம் | தொகை |
|---|---|
| 1. பயிற்சியாளர் ஒருவருக்கு ரூ.16,000/- வீதம் 25 நபர்களுக்கு (ரூ.16,000 ஜ் 25) | 4,00,000 |
| 2. உண்டி, உறையுள் கட்டணம் நபர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.300/- வீதம் 6 மாதங்களுக்கு 25 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நபர்களுக்கு (ரூ.300 ஜ் 25 ஜ் 6) | 45,000 |

| | |
|---|---|
| 3. விளம்பரம், விண்ணப்பதாரர்களின் விபரங்களை கணினியில் தொகுக்கும் செலவினம், எழுதுபொருட்கள் வாங்குதல் போன்ற இதர செலவினம். | 75,000 |
| மொத்தம் | 5,20,000 |
| (ரூபாய் ஐந்து இலட்சத்து இருபதாயிரம் மட்டும்) | |

ந முருகன்,
அரசு செயலர்.

//உண்மை நகல் //